# ரூஹா சுவாச காற்று

காற்று – 15 ஜூலை 2025 சுவாசம் – 06
ஆண்டு சந்தா ₹ 200/- தனி இதழ் ₹ 20/-



## உன் விருப்பங்களை நிறைவேற்றும் தேவன்!



# இதயம் திறந்து உங்களுடன்

கிறிஸ்துவுக்குள் பிரியமான என் அன்பு சகோதர சகோதரிகளுக்கு ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். கடந்த ஆறு மாதங்களாக நம்மை பாதுகாத்து வழி நடத்தின தேவனுக்கு ஸ்தோத்திரங்களைச் செலுத்துகிறேன். வருஷத்தின நடுவில் தம்முடைய கிரியைகளை உயிர்ப்பிக்கிற தேவனாகிய கர்த்தர், நீங்கள் எதிர்பார்க்காத பெரிய காரியங்களை உங்கள் வாழ்க்கையில் செய்ய வல்லமையுள்ளவராயிருக்கிறார். நீங்கள் நினைக்கிறதற்கும் வேண்டிக்கொள்கிறதற்கும் அதிகமான காரியங்களைச் செய்து உங்கள் இருதயத்தை பூரிப்படையச் செய்வார்.

ரூஹா ஊழியமானது ஆத்தும அறுவடையையே பிரதான ஊழியமாகக்கொண்டு 24 மணி நேரமும் செயல்பட்டு வருகிறது. கடந்த மாதங்களில் இந்தியாவிலும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பா தேசங்களிலும் தேவராஜ்யத்தின் சுவிசேஷத்தை அறிவிக்கவும், எழுப்புதலுக்கான ஜெபங்களை நடத்தவும், படைமுயற்சி கூட்டங்களில் துதி ஆராதனை ஏறெடுத்து, தேவ வார்த்தையை அறிவிக்கவும் தேவன் கிருபை செய்தார்.

ஊழியம் செய்கிற ஒவ்வொரு இடங்களிலும் தேவனுடைய ஆவியானவர் ஜனங்களை அபிஷேகத்திலும், வரங்களினாலும் நிரப்பி வருகிறார். விசேஷமாக அடுத்த தலைமுறை ஊழியர்களை உருவாக்குவதிலும், அவர்களை பயிற்றுவிப்பதிலும் தேவன் அடியேனை பயன்படுத்தி வருகிறார்.

இடைவிடாத ஊழியங்கள், பயணங்கள் இவை எல்லாவற்றிலும் தேவன் பாதுகாத்து வருகிறார். தொடர்ந்து அடியேனுடைய சுகத்திற்காக, பாதுகாப்பிற்காக இன்னும் கர்த்தரால் வல்லமையாக பயன்படுத்தப்பட ஜெபித்துக்கொள்ளுங்கள்.

## எழுப்புதலுக்காக ஜெபியுங்கள்

நாம் கடைசி காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதற்கு சாட்சி, ஒவ்வொரு நாளும் கேள்விப்படுகிற செய்திகளே ஆதாரமாக உள்ளது. மூன்றாம் உலகப்போர் ஆரம்பிக்கும் என்று சமூக ஆர்வலர்கள், அறிவியாளர்கள் கூறுகின்றனர். இந்தியா மற்றும் பாகிஸ்தான், இஸ்ரேல் மற்றும் ஈரான், உக்ரைன் மற்றும் ரஷ்யா என நாடுகளுக்கு இடையே போர்களும், உயிர்பலிகளும் அதிகமாகிக்கொண்டிருக்கின்றன. இந்தியாவில் விமான விபத்துகள், கொலை, கொள்ளைகள், வன்முறைகள், கலவரங்கள், வாலிபர்களின் சீர்க்கெட்ட கலாச்சாரங்கள் என தினமும் ஏதாவது ஒன்று அரங்கேறிக்கொண்டே இருக்கின்றன.

இந்த சமயத்தில் நாம் ஜெபத்தை அதிகமாக தீவிரப்படுத்த வேண்டும். இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாக நம் தேசம் எழுப்புதலை சந்திக்க வேண்டும் என்று ஒவ்வொரு நாளும் பாரத்தோடு ஜெபியுங்கள்.

## அவசரமாக கட்டியெழுப்பப்பட வேண்டிய ஜெப மண்டபம்

தேசத்தில் பயங்கரமான ஆவிகள் எழும்பி ஜனங்களை வஞ்சிக்கவும், சபைகளுக்கு விரோதமாக செயல்படுகிறது. ஆகவே தேசத்தில் ஜெபத்தையும் ஆராதனையையும் அதிகப்படுத்துவது அவசியமாயிருக்கிறது. விசேஷமாக அப்போஸ்தலனாகிய தோமா இந்திய தேசத்தின் எழுப்புதலுக்காக இரத்தம் சிந்தி மரித்த சென்னைப் பட்டணத்தின் மையப்பகுதியான புனித தோமையார் மலைப்பகுதியில் 24 மணி நேர துதி ஜெப மையத்திற்கன இடத்தை கடந்த வருடம் வாங்க கிருபை செய்தார்.

**“விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை மறுபடியும் கட்டியெழுப்புவேன்”** என்று சொன்ன வேத வார்த்தையின் படி, துதி மற்றும் ஜெபத்தினால் தேசத்தை சுதந்தரிக்கப்போகிறோம். இந்த எழுப்புதலின் காரியத்தில் உங்களுடைய பங்கும் இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

ஆகவே ஜெப மையத்தைக் கட்டி எழுப்புவதற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். விசுவாசத்தில் பொருத்தனையோடு ரூஹா ஜெப மையத்தின் கட்டுமான பணிக்காக நீங்கள் விதைக்கும்படி உங்களை உற்சாகப்படுத்துகிறேன்.

கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

உங்கள் சகோதரன்

**போதகர் ஆல்வின் தாமஸ்**




# A Call to Build

INDIAN HOUSE OF PRAYER FOR EVERYONE

**IN-HOPE**

PRAISE · PRAY · PROCLAIM




**தேசங்களின் ஆசீர்வாதத்திற்காக 24/7 மணி நேர துதி மற்றும் மன்றாட்டு ஜெப மையத்தை சென்னையில் கட்டுவதற்கு தேவன் தந்த தரிசனத்தில் நீங்களும் ஒரு தூணாக இருக்க விரும்புகிறீர்களா?**

## தரிசனம்

- நமது இந்திய தேசத்தின் எழுப்புதலுக்காக 24 மணி நேரமும் ஆராதனை வீரர்களும் ஜெப வீரர்களும் ஒன்றிணைந்து கர்த்தரை நோக்கி துதி பலிகளையும் ஜெப தூபத்தையும் ஏறெடுக்கும் ஒரு பலிபீடத்தை ஸ்தாபிக்க
- விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை திரும்ப எடுப்பிக்கும் விதமாக தேவ பிரசன்னம் நிறைந்த பலிபீடத்தை உருவாக்குதல்
- அப்போஸ்தலனாகிய தோமையார் இரத்த சாட்சியாக மரித்த புனித தாமஸ் மலையில் பலிபீடத்தைக் கட்ட

## பணி

- ஆராதனை, ஜெபம் மற்றும் திருப்புமுனைகளை பிரகடனப்படுத்துகிற துதி ஆராதனை வீரர்களையும் மன்றாட்டு ஜெப வீரர்களையும் உருவாக்குதல்
- இந்தியா மற்றும் உலக நாடுகளில் வெவ்வேறு திருச்சபைகள், தனி நபர் மற்றும் குழுக்கள் ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் ஆராதனை மற்றும் ஜெபத்திற்காக ஒதுக்கீடு செய்தல்
- மலையின் மீது நடக்கும் Movement on the Mount ஆராதனையை உலகளவில் 24 மணி நேரமும் அர்ப்பணிப்புள்ள மீடியா மிஷனரிகள் குழு மூலம் ஒளிபரப்புதல்

## ஏற்பாடு

- சென்னையின் மையப்பகுதியில் இந்த மகத்தான தரிசனத்தை நிறைவேற்ற, தேவன் கொடுத்த இந்த முக்கியமான கடைசிகால திட்டத்தை நிறைவேற்ற தேவ ராஜ்யத்தின் பங்காளர்களாக இணைந்து விதைப்பவர்கள் தேவை
- தேவனுடைய வீட்டைக்கட்ட நீங்கள் உதவும்போது, கர்த்தர் உங்களையும் உங்கள் வீட்டையும் அதிகமாக ஆசீர்வதிப்பார் என்று விசுவாசிக்கிறோம்.
- இந்த எழுப்புதல் மையம் கட்டுவதற்காக விதைக்கும் ஒவ்வொருவரின் பெயரும் நினைவு சுவரில் பொறிக்கப்படும், மேலும் நமது ஜெபவீரர்கள் அவர்களுக்காக தினமும் ஜெபிப்பார்கள்.

## உங்கள் காணிக்கைகளை எளிதாக விதைக்கலாம்!

**1** ACCOUNT TRANSFER

**RUAH MINISTRIES BUILDING FUND**
Acc. No.: **50200033712782** Bank Name: **HDFC BANK**
Branch: **Kodambakkam** IFSC Code: **HDFC0000574**

**RUAH MINISTRIES**
Acc. No.: **05741450000037** Bank Name: **HDFC BANK**
Branch: **Kodambakkam** IFSC Code: **HDFC0000574**

**2** UPI TRANSFER

SCAN HERE TO GIVE

**3** CHEQUE / DD

Cheque in Favour of:
**Ruah Ministries Building Fund**

**4** ONLINE GIVING

for giving online visit:
**ruahministries.org/give-online**

**தேவன், தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயஞ்செய்வார் (லூக்கா 18:7,8)**

FOR MORE INFORMATION **9884710777 | 9884901777**

# விருப்பங்களை நிறைவேற்றும் தேவன்!



**"விருப்பம்"** என்ற அற்புதமான ஒரு உணர்வை தேவன் மனதனாகிய பிறந்த ஒவ்வொருவருக்கும் கொடுத்திருக்கிறார். இந்த விருப்பமானது மனிதனின் கால சூழ்நிலைக்கு ஏற்ப மாறுபடுகிறது. வாலிபர்கள் நன்றாக படித்து டாக்டராக, இன்ஜினியராக வர வேண்டும் என்று விருப்பப்படுகிறார்கள். திருமணமானவர்கள் நல்ல அழகான வீட்டைக் கட்ட வேண்டும் என்று விரும்புகிறார்கள். சிலருடைய விருப்பம் தங்களின் வியாபாரம் தொழில் ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்பதாக இருக்கிறது. இப்படி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான விருப்பங்கள் இருக்கிறது. இதை வாசித்துக்கொண்டிருக்கிற நீங்களும் பிறரிடம் சொல்லிய, சொல்லாத எத்தனையோ விருப்பங்களை வைத்து, அதற்காக அல்லும் பகலும் உழைத்துக்கொண்டிருக்கிறீர்கள். இந்நாட்களில் கர்த்தர் உங்கள் விருப்பங்களையெல்லாம் நிறைவேற்றப்போகிறார்.

*அவர் உமது மனவிருப்பத்தின்படி உமக்குத் தந்தருளி, உமது ஆலோசனைகளையெல்லாம் நிறைவேற்றுவாராக (சங்கீதம் 20:4)*

யுத்தத்திற்கு போகிற தாவீதைப் பார்த்து ஜனங்கள் வாழ்த்தி அனுப்புகிறார்கள். இதை நாம் சங்கீதம் 20 மற்றும் 21ம் அதிகாரங்களில் வாசிக்க முடிகிறது.

ராஜாவாகிய தாவீதே, கர்த்தர் உம்மோடே கூட இருக்கிறார், யாக்கோபின் தேவனுடைய நாமம் உமக்கு உயர்ந்த அடைக்கலமாய் இருப்பதாக, கர்த்தர் சீயோனிலிருந்து உமக்கு ஒத்தாசைகளை அனுப்புவார் என்று சொல்லி, உமது மனவிருப்பத்தையும் நிறைவேற்றுவார் என்று சொல்லுகிறார்.

நம்முடைய தேவன் விருப்பங்களை நிறைவேற்றுகிற தேவன். நீங்கள் விருப்பப்படுகிற, கேட்கிற காரியங்களுக்கும் மேலான காரியங்களை உங்கள் வாழ்க்கையில் செய்கிறவர். தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார் (பிலிப்பியர் 2:13) என்று வேதம் சொல்லுகிறது. ஆம், அவர் உங்களுக்கு கொடுத்த தரிசனங்களையும் விருப்பங்களையும் கட்டாயமாக நிறைவேற்றுவார். உங்களுடைய ஆவிக்குரிய விருப்பங்களையும் பூமிக்குரிய விருப்பங்களையும் நிறைவேற்றுவார். ஏனென்றால் நம்முடைய தேவன், ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும் எண்ணி முடியாத அதிசயங்களையும் செய்கிறவர். தேவனாகிய கர்த்தர் யாருடைய விருப்பத்தை நிறைவேற்றுவார் என்று தியானிக்கப்போகிறோம்..

## 1. விசுவாசிக்கிறவர்களின்
### விருப்பத்தை நிறைவேற்றுவார்

*"இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: ஸ்திரீயே, உன் விசுவாசம் பெரிது; நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார். அந்நேரமே அவள் மகள் ஆரோக்கியமானாள்."* மத்தேயு 15:28

கானானிய ஸ்திரீ இயேசு கிறிஸ்துவிடம் வந்து தன் மகளின் பரிதாபகரமான நிலையை தெரிவித்தாள். அவள் நினைத்தபடி இயேசு கிறிஸ்து உடனே பதில் சொல்லவில்லை. எனக்கு ஒரு பதிலும் சொல்லவில்லை என்று அவள் இயேசுவை பின் தொடர்வதை விட்டு விடவில்லை. இன்று பலர் தங்களுடைய பிரச்சனைத் தீர இயேசுவிடம் வேண்டுகிறார்கள். ஆனால் பதில் உடனே கிடைக்க வில்லை என்றபோது கர்த்தரைத் தேடுவதற்கும், ஆலயம் செல்வதற்கும் முற்றுப் புள்ளி வைத்து விடுகிறார்கள். வேதத்தைத் தொடாது உலக மக்களாக மாறி விடுகிறார்கள்.

இந்த சகோதரியின் செயலைக் கொண்ட சீஷர்கள் அவளுக்காக இயேசு கிறிஸ்துவிடம் பரிந்து மன்றாடினார்கள். அதற்கு இயேசு கிறிஸ்து **'காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப் பட்டேனேயன்றி, மற்றபடியல்லவென்றார்.'** இந்த வார்த்தைகளைக் கேட்ட அந்த கானானிய ஸ்தீரி விலகிப் போகவில்லை, விட்டுச் செல்லவில்லை. அவளுடைய விசுவாசம் அதில்தான் தெரிகிறது. மறுபடியும் அவள் இயேசு கிறிஸ்துவிடம் வந்து, ஆண்டவரே, எனக்கு உதவிச்செய்யும் என்று அவரைப் பணிந்து கொண்டாள்.

அப்போழுது இயேசு, **"பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து, நாய்க் குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல"** என்று சொன்ன பதில் அவள் உள்ளத்தில் பாதிப்பை ஏற்படுத்துவதாக இருந்தாலும், அவள், **"ஆண்டவரே, நீர் சொன்னது மெய்தான்; நாய்க் குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே"** என்று தன்னைத் தாழ்த்தினாள். இயேசு கிறிஸ்து அந்த மகளின் பெரிதான விசுவாசத்தைக் கண்டு, உடனே அவளைப் பாராட்டி, **"நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது"** என்றார். அவளுடைய மகள் அந்நேரமே வேதனை நீங்கி ஆரோக்கியமானாள்.



கானானிய ஸ்திரீயைப் போல இயேசு கிறிஸ்துவிடம் வந்து, பணிந்து, ஆண்டவரே, எனக்கு உதவிச்செய்யும் என்று உண்மையாய் கேட்கும்போது, கர்த்தர் உங்களுக்கு உதவிச்செய்வார். அவர் உங்களுடைய விசுவாசத்தைப் பார்த்து அதிசயங்களைச் செய்கிற தேவன். முதலாவது விசுவாசத்துடன் ஜெபியுங்கள். அந்த விசுவாசத்தைப் பார்த்து, தேவன் உங்கள் விருப்பத்தின்படி அற்புதம் செய்வார்.

## 2. தமக்குப் பயந்தவர்களின் விருப்பத்தை நிறைவேற்றுவார்

"அவர் தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்து, அவர்கள் கூப்பிடுதலைக் கேட்டு, அவர்களை இரட்சிக்கிறார்." சங்கீதம் 145:19

கர்த்தருக்குப் பயப்படுதல் என்றால் 'தீமையை வெறுப்பதே' என்று நீதி.8:13ல் பார்க்கிறோம். தீமையான காரியங்களைத் துணிகரமாய் செய்யும் கூட்டம் இன்று அதிகமாக செயல்படுகிறார்கள். மற்றவர்கள் உள்ளத்தைத் துன்புறுத்தும் வார்த்தைகள் மிகுதியாக பெருகியிருக்கிறது. இதினால் பொய், பித்தலாட்டங்களும், ஏமாற்று வேலையும் பெருகிவிட்டது. இதைப் படித்தவர்களும், படியாதவர்களும் துணிகரமாக செய்து தீங்கை விளைவிக்கிறார்கள்.

கர்த்தருக்குப் பயப்படுவது என்றால், நிதானமாய் நடப்பதாகும் (நீதி.14:2). நிதானம் என்றால் திடமனதுடன் நடைபெற வேண்டிய காலத்தில், காரியங்கள் நடைபெறட்டும் என்ற தன்மையுடன் கர்த்தருக்குள் வாழ்வதாகும். எதையுமே ஆராய்ந்து அறிந்து பொறுமையுடன் செயல்படுவதாம்.

இன்னும் கர்த்தருக்குப் பயப்படுவது என்றால், முற்றும் கர்த்தரின் சொற்படி கீழ்ப்படிவதாகும். கர்த்தர் ஆபிரகாமின் மகனாகிய ஈசாக்கைப் பலியிடச் சொன்னபோது, ஆபிரகாம் அதைச் செய்ய கர்த்தர் சொன்ன இடத்திற்குச் சென்றான். அவனைப் பலியிட காரியங்களைச் செய்து, ஈசாக்கை பலிபீடத்தில் கிடத்தினான். வெட்டும்படிக்கு தன் கையை நீட்டிக் கத்தியை எடுத்தான். அப்பொழுது கர்த்தருடைய தூதனானவர் ஆபிரகாமை கூப்பிட்டு, பிள்ளையாண்டான் மேல் உன் கையைப் போடாதே, அவனுக்கு ஒன்றும் செய்யாதே என்று கூறினார். நீ அவனை உன் புத்திரன் என்றும், ஏகசுதன் என்றும் பாராமல் எனக்காக ஒப்புக்கொடுத்தபடியினால், நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்றார்.

ஆம், கர்த்தரின் வார்த்தையின்படி முற்றிலும் கீழ்ப்படிவது கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் ஆகும். இவ்வாறு வாழ்கிற மக்களின் விருப்பத்தை கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அருள்புரிவார்.

## 3. கர்த்தரிடம் மனமகிழ்ச்சியாய் இருப்பவர்களின் விருப்பத்தை நிறைவேற்றுவார்

மனமகிழ்ச்சி முக மலர்ச்சியைத் தரும். மனமகிழ்ச்சி நல்ல ஔஷதம். நம் வாழ்வில் மனமகிழ்ச்சியாயிருக்க நாம் வேதத்தை நேசிக்கிற மக்களாக இருக்க வேண்டும். சங்.119:174ல் உம்முடைய வேதம் என் மனமகிழ்ச்சி என்று பார்க்கிறோம். ஆவியும் ஜீவனும் நிறைந்த வார்த்தைகள் நம் உள்ளம் மகிழத்தக்கதான காரியத்தை அருளுகிறது. 'சாந்தகுணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்து, மிகுந்த சமாதானத்தினால் மனமகிழ்ச்சியாயிருப்பார்கள்.' சாந்தகுணமானது ஆவியின் கனிகளில் ஒன்றாகும். சாந்தகுணமுள்ளவர்கள் புசித்துத் திருப்தியடைவார்கள். அவர்களின் விருப்பத்தைக் கர்த்தர் நிறை வேற்றுவார்.

ஒரு குறிப்பிட்ட அலுவலகத்தில் ஒரு கிளார்க் (Clerk) பணிபுரிந்தார். அவர் தனது அலுவலகப் பணிகளில் மிகவும் நேர்மையுடனும் உண்மையுடனும் இருந்தார். அந்த அலுவலகத்தில் ஒரு புதிய மேற்பார்வையாளர் (Manager) இந்த கிளார்க்கிற்கு மேலதிகாரியாக வந்தார். இந்த கிளார்க் ஞாயிற்றுக்கிழமைகளில் தேவாலயத்திற்கு செல்வது, புதிய மேனேஜர்க்கு பிடிக்கவில்லை. எனவே, அவர் அனைத்து முக்கியமான கூட்டங்களையும் ஞாயிற்றுக்கிழமைகளுக்கு திட்டமிட்டு, இந்த கிளார்க்கிற்கு பொறுப்புகளை வழங்கினார். இந்த கிளார்க்கும் மேனேஜருக்கு உண்மையாய் கீழ்ப்படிந்தார். ஆனால் அவர் வீட்டிற்க்கு சென்று, **“ஆண்டவரே, ஞாயிற்றுக்கிழமைகளில் வேலை செய்ய எனக்கு விருப்பமில்லை. தயவுசெய்து என் இருதயத்தின் விருப்பத்தை நிறைவேற்றுங்கள். இந்த அலுவலகத்தில் இதினிமித்தம் பிரச்சனை ஏதும் வராதபடி காத்தருளும்”** என்று ஜெபித்தார். மாதங்கள் உருண்டோடின! கிளார்க்கின் சிறந்த செயல்திறனைக் காணும்படி, தேவன் அவருடைய மேலாளரின் கண்களைத் திறந்தார். பணி சம்பந்தமாக அடுத்தக் கூட்டம் திட்டமிடப்பட இருந்தது. இந்த கிளார்க் மேலதிகாரியிடம் சென்று, “ஐயா வருகிற ஞாயிற்றுக்கிழமை மீட்டிங் வைக்கலாமா?” எனக் கேட்டார். அதற்கு அவரது மேலதிகாரி,



கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார். சங்கீதம் 37:4

**“இனி நான் உன்னை தொந்தரவு செய்ய விரும்பவில்லை. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நீங்கள் தேவாலயத்திற்கு சுதந்திரமாக செல்லலாம்”** இந்த கிளார்க்கின் பிரார்த்தனையைச் சார்ந்தே இருந்தார். மேலும், அவர் தனது மனைவியினிடத்தில், “இயேசு எப்போதும் இந்த கிளார்க்குடன் இருக்கிறார்” என்றும் கூறினார். என்ன ஒரு அற்புதமான சாட்சி. அந்த கிளார்க் வேறு யாருமல்ல. தேவனால் வல்லமையாக பயன்படுத்தப்பட்ட அன்பின் அப்போஸ்தலர் தினகரன் ஐயா அவர்களே.

பிரியமானவர்களே, ஆண்டவர் உங்களுக்கும் இதையே செய்வார். உங்கள் இருதயத்தின் வாஞ்சைகளை அவர் அறிவார். தேவனிடமிருந்து நீங்கள் வல்லமை, பெலன், ஞானம் மற்றும் மனிதர்களின் கண்களின் தயவையும் பெற்றுக்கொள்ளலாம். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், தேவனையே எப்பொழுதும் சார்ந்துகொள்ளுங்கள். அவரிடத்தில் மனமகிழ்ச்சியாயிருக்கும்போது அவர் உங்கள் விருப்பங்களை நிறைவேற்றுவார்.

## 4. நீதிமானின்
### விருப்பத்தை நிறைவேற்றுவார்

நீதிமான் என்றால் கர்த்தருடைய நீதியைப் பெற்று அதன்படி வாழ்கிறவர்களாகும். அவர்களின் செய்கை எல்லாம் நீதி நிறைந்ததாகவே இருக்கும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிந்திய விலையேறப்பெற்ற இரத்தத்தாலே நீங்கள் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறீர்கள். இயேசு கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே நீங்கள் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறீர்கள். ஆகவே நீதிமான்களாகிய உங்களுக்கு ஒரு தைரியம் எப்பொழுதும் இருக்க வேண்டும்

நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால் அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம் (1யோவான் 5:14) தேவனிடத்தில் உங்கள் விருப்பங்களை நீங்கள் சொல்லும்போது, அவர் உங்களுக்கு செவிகொடுத்து அதை நிறைவேற்றவும் செய்கிறார். சாலமோனின் விருப்பம் ஞானமாயிருந்தது.

"...நீதிமான் விரும்புகிற காரியம் அவனுக்குக் கொடுக்கப்படும்." நீதி. 10:24

கிபியோனிலே கர்த்தர் சாலொமோனுக்கு தரிசனமாகி: நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள் என்றார் (1 இராஜாக்கள் 3:5). தன்னுடைய வாலிபத்தில் இஸ்ரவேல் ஜனத்திற்கு ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்ட சாலொமோன் கர்த்தரிடத்தில் ஜனங்களை நியாயம் விசாரிக்கும்படி ஞானமுள்ள இருதயத்தைக் கேட்டார். கர்த்தர் அவனுக்கு ஞானத்தைக் கொடுத்ததுமல்லாமல் அவன் கேளாத ஐசுவரியத்தையும், மகிமையையும் கூடக்கொடுத்தார். அதேப்போல, தேவனுடைய ஊழியக்காரர்களாகிய மோசே, உம்முடைய மகிமையை காண வேண்டும் என்று கேட்டபொழுது தேவன் தம்முடைய மகிமையை மோசேக்கு காண்பித்தார். எலிசா, எலியாவின் மேலிருந்த ஆவியின் வரத்தை இரட்டிப்பாகப் பெற விரும்பினார். அவர் விரும்பியபடியே அந்த ஆவியின் வரம் இரட்டிப்பாக எலிசாவுக்கு கொடுக்கப்பட்டது.





ஆம், எனக்கு பிரியமானவர்களே, தேவனுடைய ஊழியக்காரர்களே உங்கள் ஆவிக்குரிய பூமிக்குரிய விருப்பத்தையும் தேவனிடத்தில் சொல்லுங்கள். தேவன் உங்களுக்கு நிச்சயமாக அதை கொடுப்பார் என்பதில் சந்தேகமேயில்லை.

என் நாமத்தினாலே நங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன் (யோவான் 14:14) என்று இயேசு சொன்னார். இந்த வசனத்தின் மூல அர்த்தம் என்னவென்றால், நீங்கள் உங்கள் விருப்பத்தை தேவனிடத்தில் சொல்லும்போது, அவை இல்லையென்றாலும் உங்களுக்காக அவர் உருவாக்கித்தருவார் என்பதே.

ஆம், உங்களுடைய எதிர்கால விருப்பங்கள், உங்கள் பிள்ளைகளின் விருப்பங்களை தேவனிடத்தில் சொல்லுங்கள். நிச்சயமாக தேவன் அதை தம்முடைய நாமத்தின் மகிமைக்கென்று நிறைவேற்றுவார்.

# தாவீதின் விருப்பம்



நான் என்னாலே இயன்றமட்டும் என் தேவனுடைய ஆலயத்துக்கென்று பொன்வேலைக்குப் பொன்னையும், வெள்ளிவேலைக்கு வெள்ளியையும், வெண்கலவேலைக்கு வெண்கலத்தையும், இரும்புவேலைக்கு இரும்பையும், மரவேலைக்கு மரத்தையும், பதிக்கப்படத்தக்க காந்தியுள்ள கற்களையும், பலவருணக் கற்களையும், விலையேறப்பெற்ற சகலவித ரத்தினங்களையும், வெண்கற்பாளங்களையும், கோமேதக முதலிய கற்களையும் ஏராளமாகச் சவதரித்தேன். இன்னும் என் தேவனுடைய ஆலயத்தின்மேல் நான் வைத்திருக்கிற வாஞ்சையினால், பரிசுத்த ஆலயத்துக்காக நான் சவதரித்த அனைத்தையும் தவிர, எனக்குச் சொந்தமான பொன்னையும் வெள்ளியையும் என் தேவனுடைய ஆலயத்துக்கென்று கொடுக்கிறேன். அறைகளின் சுவர்களை மூடுவதற்காகவும், பொன்வேலைக்குப் பொன்னும், வெள்ளிவேலைக்கு வெள்ளியும் உண்டாயிருக்கிறதற்காகவும், கம்மாளர் செய்யும் வேலை அனைத்திற்காகவும், ஓப்பீரின் தங்கமாகிய மூவாயிரம் தாலந்து தங்கத்தையும், சுத்த வெள்ளியாகிய ஏழாயிரம் தாலந்து வெள்ளியையும் கொடுக்கிறேன். (1 நாளாகமம் 29:2-4)

தேவனுடைய ஆலயத்திற்காக பக்தி வைராக்கியமாய் இருந்த தாவீது, தேவனுடைய பெட்டி திரைகளின்கீழ் இருக்கும்போது, நான் கேதுருமர வீட்டிலே வாசமாயிருப்பது எப்படி? தேவனுடைய ஆலயத்தைக் கட்ட வேண்டும் என்று விருப்பம் கொண்டார். அதற்காக அவர் சேர்த்து வைத்த பொருட்கள் ஏராளம். அவைகள் கணக்கிலடங்காதவைகள். தாவீதின் விருப்பத்தின்படியே சாலொமோனைக்கொண்டு தேவன் ஆலயத்தைக் கட்டி முடித்தார். தேவனுடைய ஆலயத்தைக் கட்ட விருப்பமாயிருந்த தாவீதைப் பார்த்து, **நான் உனக்கு ஒரு நிலையான வீட்டைக் கட்டுவேன் (1 நாளாகமம் 17:10)** என்று சொல்லி அவனை ஆசீர்வதித்தார்.

ஆம், எனக்கன்பான தேவனுடைய பிள்ளைகளே, கர்த்தருடைய ஆலயத்தைக் கட்ட நீங்கள் விருப்பமாயிருக்கிறீர்களா? **நீங்கள் கர்த்தருடைய ஆலயத்தைக்கட்டும்போது, தேவன் உங்கள் வீட்டை, உங்கள் குடும்பத்தை, உங்கள் பிள்ளைகளின் வாழ்க்கையைக் கட்டுவார் என்பதில் சந்தேகமே இல்லை. ஆகவே இன்றே தீர்மானம் எடுங்கள். கர்த்தர் உங்கள் விருப்பங்கள் எல்லாவற்றையும் நிறைவேற்றுவார்.**



# உங்களைக் குறித்த
## தேவனுடைய விருப்பம்

சர்வலோகத்தையும் படைத்த தேவனாகிய கர்த்தரின் விருப்பம் என்னவென்றால், நாம் தேவனுடைய ஆலயத்தைக் கட்ட வேண்டும் என்பதே. இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுக்கு வீடுகளையும் மாளிகைகளையும் கட்டுவதிலே தங்கள் முழு கவனத்தையும் செலுத்தினார்கள். தேவனுடைய ஆலயத்தை கவனியாமற்போனார்கள். அப்பொழுது தேவன் ஆகாய் என்ற தீர்க்கதரிசியை எழுப்பி, நீ போய் இஸ்ரவேல் ஜனங்களிடத்தில், நீங்கள் எனக்கு ஆலயத்தைக் கட்டுங்கள், அதன்பேரில் நான் பிரியமாயிருப்பேன் என்று சொன்னார். அப்பொழுது ஜனங்கள் எல்லாரும் தேவனுடைய சத்தத்திற்கு கீழ்படிந்து ஆலயத்தைக் கட்டினார்கள். அப்பொழுது கர்த்தர், இன்று முதல் நான் உங்களை ஆசீர்வதிப்பேன் (ஆகாய் 2:9) என்று ஆசீர்வதித்தார். ஆம் எனக்கன்பான தேவனுடைய பிள்ளைகளே, நீங்களும் கர்த்தருடைய விருப்பமாகிய ஆலயத்தைக் கட்டும்போது கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார். இன்றைக்கே தேவனுடைய ஆலயத்தைக் கட்ட தீர்மானம் எடுங்கள். நீங்கள் கையிட்டு செய்யும் எல்லா வேலையிலும் தேவனாகிய கர்த்தர் உங்களோடு கூட இருந்து வழிநடத்துவார்.

"ஆலயத்தைக் கட்டுங்கள், அதின்பேரில்
நான் பிரியமாயிருப்பேன், அதினால் என் மகிமை விளங்கும்
என்று கர்த்தர் சொல்லுகிறார் " ஆகாய் 1:8




# எழுப்புதலுக்காக... எக்காள அழைப்பு

கடந்த மே மாதம் 15,16,17 ஆகிய தேதிகளில் ரூஹா ஊழியத்தின் சார்பாக எழுப்புதலுக்காக... எக்காள அழைப்பு என்ற மாபெரும் எழுப்புதல் கூட்டம் காலையிலும் மாலையிலும் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கேரளாவிலிருந்து **போதகர் ரெய்சன் தாமஸ், அப்போஸ்தலர் விக்டர் ராஜாமணி, போ. ப்ராங்கிளின், போ. ஜெரோம், போ. ராபர்ட்** மற்றும் நமது சகோதரர் **போ. ஆல்வின் தாமஸ்** அவர்கள் கலந்து கொண்டு துதி ஆராதனை, பாரம் மிகுந்த ஜெபங்கள், எழுப்புதலைப் பற்ற வைக்கும் தேவ செய்திகளை அளித்து, இந்திய தேசம் எழுப்புதலைக் காண வேண்டும் என்ற வாஞ்சையினால் நிரப்பினார்கள்.

வந்திருந்த தேவ பிள்ளைகள் விண்ணப்பத்தின் ஆவியினாலும், மன்றாட்டத்தின் ஆவியானலும் நிரம்பினர். அநேகர் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்டனர்.











# தூத்துக்குடி பேரின்ப பெருவிழா



கடந்த மே மாதம் 15,16,17 ஆகிய தேதிகளில் ரூஹா ஊகர்த்தருடைய பெரிதான கிருபையால் 35வது ஆண்டு தூத்துக்குடி பேரின்ப பெருவிழாவில் நமது சகோதரர் போ. ஆல்வின் தாமஸ் அவர்களை கர்த்தர் வல்லமையாக பயன்படுத்தினார்.

முதல் நாள் பேரின்ப பெருவிழாவின் ஆராதனை வேளையில் ஆண்டவருடைய பிரசன்னம் மைதானம் முழுவதும் நிரம்பிற்று. "**அக்கரைக்கு கடந்து போவோம் வாருங்கள்**" என்ற தீர்க்கதரிசன வார்த்தையை பிரசங்கித்தபோது அநேகருடைய உள்ளங்களைத் தேவன் தொட்டார். பல நாட்களாய் போராட்டத்தோடு இருந்தவர்களுக்கு கர்த்தர் ஒரு விடுதலையை அந்நாளில் அளித்தார்.

2ம் நாள் பேரின்ப பெருவிழாவில் புதிய பாடல்களைப் பாடி தேவ தாசன் ஜனங்களை அபிஷேகத்தில் நடத்தினார். நுகங்கள் முறியட்டும் தலைப்பில் தேவ செய்தி அளித்தபோது கர்த்தர் அநேகருடைய கட்டுகளை அவிழ்த்தார். இறுதி ஜெப வேளையில் வாலிபர்கள் மற்றும் சிறு பிள்ளைகளின் பாதுகாப்பிற்காக சிறப்பு பிரார்த்தனை ஏறெடுக்கப்பட்டது. சுகத்தையும் விடுதலையும் பெற்றுக்கொண்டனர். இரவு 12 மணி வரை ஒவ்வொருவருக்காகவும் எண்ணெய் பூசி விசேஷித்த ஜெபத்தை ஏறெடுத்தார். இக்கூட்டங்களை தூத்துக்குடி முழுஇரவு ஜெப ஐக்கியம் சிறப்பாக ஒழுங்கு செய்திருந்தார்கள். தேவனுடைய நாமம் மகிமை பட்டது.

## கிறிஸ்துவின் பாறை சபையின்

# 10 ஆம் ஆண்டு பிரதிஷ்டை ஆராதனை

ஜூன் 03ம் தேதி தூத்துக்குடி மாவட்டத்தில் திருச்செந்தூர் அருகில் புன்னைக்காயல் என்ற மீனவ கிராமத்தில் உள்ள போதகர். தொம்மையப்பா அவர்களின் கிறிஸ்துவின் பாறை சபையின் 10 ஆம் ஆண்டு பிரதிஷ்டை ஆராதனையில் நமது போதகரைக்கொண்டு தேவன் மகத்தான காரியங்களை செய்தார். ஆராதனை வேளையில் ஜனங்கள் உற்சாகமாய் தேவனை ஆராதித்தனர். **“விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்”** என்ற தீர்க்கதரிசன வார்த்தையை பிரசங்கித்து, சபையை உற்சாகப்படுத்த தேவன் கிருபை செய்தார். ஜெப வேளையில் வியாதியோடு போராட்டத்தோடு வந்தவர்கள் விடுவிக்கப்பட்டார்கள். இந்தியாவிலே முதல் அச்சகம் அமைக்கப்பட்ட இந்த புன்னைக்காயல் மற்றும் அதை சுற்றியுள்ள கிராமங்களில் கடைசி கால எழுப்புதலை




## சிவகாசி

# பெந்தேகொஸ்தே பெருவிழா







ஜூன் 06ம் தேதி சிவகாசி வட்டார போதகர்கள் ஐக்கியத்தின் மூலமாக நடைபெற்ற பெந்தேகொஸ்தே பெருவிழாவில் நமது சகோதரர் ஆல்வின் தாமஸ் அவர்கள் துதி ஆராதனையில் ஜனங்களை நடத்தி, தீர்க்கதரிசன தேவ செய்தி அளித்தார். சிவகாசி பட்டணம் முழுவதிலுமிருந்து போதகர்களும் விசுவாசிகளும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். கூட்டத்தின் இறுதியில் வாலிபர்களுக்காக ஜெபங்களை ஏறெடுத்தபோது, பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள். அநேகர் தங்கள் வாழ்க்கையை முற்றிலுமாக தேவனுக்கென்று ஒப்புக்கொடுத்தனர். பரிசுத்த ஆவியின் பின்மாரி மழையின் அபிஷேகம் அந்த இடத்தில் ஊற்றப்பட்டது.க்ஷ

ஆதரவற்றவர்களுக்கு கரம் கொடுக்கும்

# நெசா தொண்டு நிறுவனம்

அன்பானவர்களே.. நமது நெசா தொண்டு நிறுவனத்தின் மூலமாக ஏழை எளிய ஜனங்களுக்கு பல உதவிகளைச் செய்து கொண்டு வருகிறோம். கடந்த வருடம் டிசம்பர் மாதம் 500க்கும் மேற்பட்ட ஆதரவற்றவர்கள், மாற்றுத்திறனாளிகள், ஏழைகளுக்கு புதிய ஆடைகளை அன்பளிப்பாக கொடுக்கப்பட்டது.

ஒவ்வொரு நாளும் சுமார் 300க்கும் அதிகமானோருக்கு மதிய உணவு அளித்து வருகிறோம். ஒவ்வொரு மாதமும் 50 குடும்பங்களுக்கு அரிசி மளிகை பொருட்கள் அடங்கிய நெசா அற்புத பெட்டகம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த நற்காரியங்களை செய்வதற்கு பொருளாதாரத்தினால் தாங்கி வருகிற உங்களை கர்த்தர் அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக!

உங்களுடைய பிறந்தநாள் மற்றும் திருமண நாட்கள் போன்ற விசேஷ நாட்களில் ஆதரவற்றவர்களுக்கும் ஏழை எளியவர்களுக்கும் உதவி செய்து உங்கள் மகிழ்ச்சியான நாளைக் கொண்டாடுங்கள்.

**நீங்கள் அனுப்புகிற நன்கொடைக்கு 80G வரிவிலக்கு உண்டு**







nessatrust.67026734@hdfcbank

Share the Love

**NESSA TRUST**
**HDFC BANK**
AC.NO: **50200002673830**
BRANCH: **KODAMBAKKAM**
IFSC CODE: **HDFC0000574**
**94441 50777**